


# 07.05.2026 செய்திகள்

## இந்தியா - வியட்நாம் உறவில் புதிய மைல்கல்

» முக்கிய ஒப்பந்தங்கள்

- இரு தரப்பு வர்த்தகத்தை 2030க்குள் 2.80 லட்சம் கோடி ரூபாயாக உயர்த்த முடிவு.
- இந்தியாவின் யு.பி.ஐ., மற்றும் வியட்நாமின் அதிவேக பணப்பரிவர்த்தனைகளை இணைக்க உடன்பாடு.
- இந்திய மருந்துகள், திராட்சை, மாதுளம் பழங்கள் வியட்நாமுக்கு ஏற்றுமதி.
- இந்தோ - பசிபிக் பிராந்தியத்தில் அமைதியை நிலைநாட்ட உறுதி.
- அரிய கனிம வளங்கள், எரிசக்தி துறைகளில் புதிய முயற்சிகளை மேற்கொள்ள இரு நாடுகளும் திட்டம்.

## பிற வழக்குகளைவிட தேர்தல் ஆணையர்கள் நியமன விவகாரம் முக்கியத்துவம் வாய்ந்தது

- பிரதமர், மக்களவை எதிர்க் கட்சித் தலைவர், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ஆகியோர் அடங்கிய குழு அளிக்கும் பரிந்துரையின் அடிப்படையில், தேர்தல் ஆணையர்களை குடியரசுத் தலைவர் நியமிக்கவும், இந்த நடைமுறையை தேர்தல் ஆணையர்கள் நியமனம் தொடர்பாக நாடாளுமன்றம் சட்டம் இயற்றும் வரை பின்பற்றவும் 2023-ஆம் ஆண்டு மார்ச்சில் தேர்தல் ஆணையம் உத்தரவிட்டது.
- இந்த மசோதாவுக்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து மசோதா சட்டமானது.
- இந்தச் சட்டத்தின் கீழ், தேர்தல் ஆணையர்களைத் தேர்வு செய்யும் குழுவில் இருந்து உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி நீக்கப்பட்டார்.
- இதற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் ஜனநாயக சீர்திருத்தங்கள் சங்கம், லோக் பிரஹாரி ஆகிய தன்னார்வ அமைப்புகள் உள்பட பல்வேறு தரப்பினர் மனு தாக்கல் செய்துள்ளனர்.

## அக்னி - 6 ஏவுகணை

- இந்தியாவின் முதல் கண்டம் விட்டு கண்டம் பாயும் ‘அக்னி-6 ஏவுகணையை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) வடிவமைத்துள்ளது.
- 10,000+ கிமீ தூரம் பாயும் திறன் மற்றும் எம்ஐஆர்வி தொழில் நுட்பத்துடன். அக்னி-6 வரலாறு படைக்கத் தயாராக உள்ளது.
- இதுவரை அமெரிக்கா. ரஷ்யா, சீனா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய 5 நாடுகள் மட்டுமே கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சக்தியைக் கொண்டுள்ளன. இப்போது, இந்தியா அதே வரிசையில் தனது நிலையை வலுப்படுத்தப் போகிறது.
- எம்ஐஆர்வி தொழில்நுட்பம் என்பது, ஒரே ஒரு ஏவுகணை மூலம் வெவ்வேறு இலக்குகளுக்குப் பல அணு ஆயுதங்களை அனுப்ப அனுமதிக்கும் ஒரு நுட்பமாகும்.
- இது தாக்குதல் திறனை அதிகரிப்பதுடன், எதிரி நாடுகளின் ஏவுகணை எதிர்ப்புத் தற்காப்பு அமைப்புகளை முறியடிக்கவும் உதவுகிறது.